# 4. திருவிவிலியத்தின்படி வாழ்வர்

# 16 இறைமக்களின் விசுவாச வரலாறு

எட்டாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கும் கிறிஸ்தவ பிள்ளையாகிய நீங்கள் உங்களின் கடந்த கால வாழ்க்கையை நோக்கினால், விசுவாசமும் நம்பிக்கையும் உள்ள உங்களுக்கு கடவுள் அருளிய ஆசீர்வாதங்கள் அநேகம் என்பது தெரியும். கடவுள் தனது எல்லையற்ற அன்பினால் உங்களுக்கு பல ஈவுகளை வழங்கியுள்ளார்.

இன்று, உங்களோடு இருந்து செயல்படும் உயிருள்ள ஆண்டவர் மனுக்குலத்தாருடன் இணைந்து நம் ஒவ்வொருவருக்கும் வழிகாட்டுகின்றார். கடவுளின் செயற்பாட்டினால் மனிதர் பல்வேறு அனுபவங் களைப் பெற்று, விசுவாச வரலாற்றுக்கு அர்த்தம் கொடுக்கிறார்கள். இவை அனைத்தையும் நோக்கும்போது விசுவாசம் உங்களின் வாழ்க்கையை நன் மார்க்கத்திற்கு இட்டுச் செல்கிறது என்பது தெளிவு.

பழைய ஏற்பாட்டு ஆதிப் பிதாக்களின் நம்பிக்கை திருவிவிலிய வரலாற்றில் உள்ளது. விசுவாசத்தின் தந்தையாகிய ஆபிரகாம் கடவுளின் கட்டளைக்கு அமைய தன் சொந்த இடத்தையும், உறவினரையும் விட்டுச் சென்றார்.

**வாசிப்போம்**
**தொடக்கநூல் 13**

இறைவன் அவருக்குக் கொடுத்த வாக்குத்தத்தத்தின்படி, அயலவர்களை ஆசீர்வதிப்பவராக அவரைத் தெரிந்தெடுத்தார்.

ஆபிரகாமும் எவ்வித கலக்கமுமின்றி ஆண்டவரை வழிபட்டு தன் பயணத்தைத் தொடங்கினார். ஆபிரகாம் விசுவாசத்தின் தந்தையாக செயற்பட்டார்.


இலவச விநியோகத்திற்காக

## மோசேயின் கீழ் இஸ்ரயேலர் விடுதலை பெற்றமை

பறைசாற்றுபவன் :- அரசன் பார்வோனின் கட்டளை. அனைவரும் கேளுங்கள்.

இஸ்ரயேலருக்கு பிறக்கும் எல்லா ஆண்குழந்தைகளும் கொல்லப்பட வேண்டும். (எகிப்திலே அவலக்குரல்)



இப்படிப்பட்ட காலத்திலே தான் மோசே பிறந்தார். அவருக்கு மருத்துவிச்சியர் சிப்பிராள், பூவாள் ஆகிய இருவரின் தயவு கிட்டியது. மோசேயின் சகோதரி மிரியாமின் உதவியுடன் தன் தாயின் பராமரிப்பில் எகிப்து இளவரசியினால் மோசே வளர்க்கப்பட்டார். இஸ்ரயேல் மக்கள் படும் வேதனைகளைக் கண்டிருந்த அவர் எதிர்பாராமல் நிகழ்ந்த ஒரு நிகழ்வின் காரணமாக எகிப்தை விட்டு மீதியான் தேசத்திற்கு ஓடிச் சென்று, தனது மாமன் எத்திரோவுடன் இருந்து அவனது ஆடுகளை மேய்த்தார். ஒரு நாள் ஒரேப் மலையை அண்மிக்கும்போது எரிந்து கொண்டிருந்த முட்புதரின் தீப்பிழம்பில் ஆண்டவரின் அழைப்புக் குரல் கேட்டது.

***வாசிப்போம்***
***விடுதலைப்பயணம் 3:1-7***

அவ்வாறான அழைப்பு நமக்கும் கிடைக்கும்.

### மோசேயின் குரல்

*நாவன்மை அற்றவன் நான்;*

*எனக்கு வாய் திக்கும்;*

*நாவும் குழறும்;*

*வேண்டாம் ஆண்டவரே தகுதியுடைய வேறொருவரை அனுப்பி வைப்பீராக*

**ஆண்டவரின் குரல்** - உனது சகோதரனாகிய ஆரோன் நாவன்மை உடையவன். உன்னை சந்திக்க வந்து கொண்டிருக்கிறான்.

*நீ அவனிடம் பேசி வார்த்தைகளை அவன் வாயில் வைப்பாய். நான் உன் வாயிலும் அவன் வாயிலும் இருந்து கொண்டு செய்ய வேண்டியவற்றை உங்களுக்கு அறிவிப்பேன். (விடுதலைப் பயணம் 4:15)*

இவ்வாறு மோசேக்கு கடவுள் கொடுத்த விசுவாசத்தின் உறுதிப்பாட்டுடன் ஒடுக்கப்பட்ட இஸ்ரயேல் மக்கள் விடுதலையை எதிர்நோக்கினர்.

எகிப்திலே பத்துப் பெருந்துன்பங்களின் பின் இஸ்ரயேல் மக்களை அங்கிருந்து பார்வோன் அனுப்பினான். எனினும் பின்னர் அவர்களின் பின்னால் படைகளை அனுப்பியபோதும் கடவுளின் செயலால் செங்கடலையும் கடந்தார்கள். 'சீனாய்' பாலைநிலத்தில் முறுமுறுத்த மக்களுக்கு மன்னாவையும், மாராவிலே தண்ணீரையும் கொடுத்தார். இது மோசேக்கும், கடவுளுக்கும் உள்ள விசுவாசத்தின் உறுதிப்பாடாகும்.



**மோசே பின்வருமாறு தன்னைப் பற்றிச் சிந்தித்தார்.**

எனக்குத் தகுதியில்லை (வி.ப 3 : 11-12)

என்னை அனுப்பியவர் யார்? (வி.ப 3:13 15, 16)

நான் நன்றாக பேசக் கூடியவன் அல்லன். (வி.ப 4 : 10-12)



எனினும் மக்களை வழிநடத்த கடவுள் அவரை தெரிவு செய்தார்.

## கடவுளின் வாக்குத்தத்தங்களை நாம் அறிந்து கொள்வதெப்படி?

யூதப் பெண்ணாகிய தீமோத்தேயுவின் தாய் ஆண்டவரிடம் நம்பிக்கையுடையோராய் வாழ்ந்து தனது மகனையும் உறுதியான விசுவாச வாழ்வில் வளர்த்தார்.

***மனனம்செய்வோம்***

***1 தீமொத்தேயு 6:12***

விசுவாசவாழ்வுஎன்னும்போராட்டத்தில்ஈடுபடுநிலைவாழ்வை பற்றிக் கொள். அதற்காகவே அழைக்கப்பட்டிருக்கிறாய். அதனை முன்னிட்டே பல சாட்சிகள் முன்னிலையில் விசுவாசத்தைச் சிறப்பாக அறிக்கையிட்டாய்.



இலவச விநியோகத்திற்காக

**இறைவனின் வாக்குறுதிக்குச் செவிகொடுப்போமாக.**



*எபிரேயர் 4 : 14*
*வானங்களைக் கடந்து சென்ற இறைமகனாகிய இயேசுவை நாம் தனிப்பெரும் தலைமைக் குருவாகக் கொண்டுள்ளதால் நாம் அறிக்கையிடுவதை விடாது பற்றிக் கொள்வோமாக.*

இயேசுவை அறிக்கையிடுவதை விடாது பற்றிக் கொள்வோமாக.



*2 கொரிந்தியர் 5 : 17*

*ஒருவர் கிறிஸ்துவோடு இணைந்திருக்கும்போது புதிதாகப் படைக்கப்பட்டவராய் இருக்கிறார். பழையன கழிந்து, புதியன புகுந்தன அன்றோ!*

**'பிஸ்டிஸ்'** என்ற கிரேக்க சொல்லின் அர்த்தம் **விசுவாசம்** ஆகும். நமது வாழ்க்கையிலும் விசுவாசமும், உறுதிபாடும் தேவை.

**பாடுவோம்**

*இயேசு அழைத்தாரே - இயேசு அழைத்தாரே*
*சேவை செய்ய சீடர் - சேவை செய்ய சீடர்*
*நம்மை அழைத்தாரே நம்மை அழைத்தாரே*
*நீயும் நானும் அவர் சேவை செய்வோம்.*

**கிறிஸ்து இயேசு இறந்து உயிர்த்தெழுந்ததன் மூலம்** நம்பிக்கையைக் கொடுத்துள்ளார். திருவிவிலியத்தினூடாக இறையரசின் வளர்ச்சிக்காக செயற்படுவோம். இயேசுவின் அன்பு, கிருபை என்பவற்றின் மூலம் ஆண்டவரின் வழிநடத்துதலையும் ஆசீர்வாதங்களையும் பெற்றுக் கொண்டு, மாறிவரும் உலகில் விசுவாச வாழ்க்கை வாழ உறுதி கொள்வோம்.





இலவச விநியோகத்திற்காக

செபம்
ஆண்டவரே நாங்கள் பிறருக்காக வாழ உதவி புரியும்.



## செயற்பாடு

கடவுள் நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையிலும் விசுவாசத்தை உறுதிப்படுத்திய சம்பவம் ஒன்றினை எழுதி, அதற்காக இறைவனுக்கு நன்றி கூறும் வண்ணமாக செபம் எழுதுக.